## 6.16 விளம்பரம் – அரசு விளம்பரங்கள் – நாளிதழ்களில் வெளியிடுகையில் பின்பற்ற வேண்டிய முறைகள் மற்றும் செலவினத்தைச் குறைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

செய்தி மற்றும் சுற்றுலா (விளம்பரம்)த்துறை

அரசாணை (நிலை) எண். 108 நாள் : 28.5.1999

1. அரசாணை(நிலை) எண். 764, பொது (செ.த.தொ)த்துறை, நாள். 26.3.80
2. அரசாணை(நிலை எண். 617, பொதுப்பணித்துறை, நள். 16–3–90.
3. அரசாணை(நிலை எண். 140, செய்தி மற்றும் சுற்றுலா (விளம்பரம்)த்துறை, நாள். 6.8.96.
4. அரசாணை(நிலை எண். 290, செய்தி மற்றும் சுற்றுலா (விளம்பரம்)த்துறை, நாள். 12.12.97
5. அரசாணை நிலை எண். 490, நிதி (சம்பளம்)துறை நாள். 11.9.98.

**ஆணை**

அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களின் விளம்பரங்களை நாளிதழ்களில் வெளியிடுகையில் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் மற்றும் செலவினத்தைக் குறைப்பதற்காகக் கடைபிடிக்க வேண்டிய சில வரைமுறைகள் பார்வை ஒன்றிலிருந்து ஐந்து வரையில் படிக்கப்பட்ட அரசாணைகளில் வெளியிடப்பட்டு உள்ன.

2. அரசின் செயல்பாடுகள் அனைத்தும் மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் வெளிப்படையாக இருத்தல் வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையிலும், அதே சமயத்தில் விளம்பரச் செலவினத்தில் சிக்கனத்தைக் கடைபிடிக்கும் வகையிலும், அரசின் அனைத்துத் துறைகளும், நிறுவனங்களும் ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்களை நாளிதழ்களில் வெளியிடும்போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகளைப் பற்றி மீண்டும் பரிசீலனை செய்யப்பட்டன. அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர் கீழ்க்காணும் திருத்திய ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

3. ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்களை நாளிதழ்களில் வெளியிடுவதற்குக் கீழ்க்காணும் நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

4. அரிய கருவிகள் கொள்முதல் செய்தல் மிகப் பெரிய கட்டுமானப் பணிகள் குறித்த ஒப்பந்தப் புள்ளி விளம்பரம் வெளியிடும்போது அவ்விளம்பரங்களைக் கூடுதலாக தமிழ் / ஆங்கில நாளிதழ்களில் சிறப்பு நிகழ்வாக வெளியிட ஒப்பந்தப்புள்ளி அலுவலர் கோரும் பொழுது அவற்றைப் பரிசீலித்து அக்கோரிக்கையின் தன்மைக்கேற்ப கூடுதலாக நாளிதழ்களில் வெளியிட அதிகாரம் அளிக்கப்படுகிறது.

5. ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட மதிப்புள்ள பொருட்களை வாங்குவதற்குத் திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி பெறவேண்டுமென்பதை தமிழ்நாடு நிதிவிதித் தொகுப்பிலுள்ள விதிகளுக்கத் தனியாக நிதித்துறையிலிருந்து திருத்தம் வெளியிடப்படும்.

6. வரைகலை விளம்பரங்களைப் பொறுத்தவரை, தேவைக்கு ஏற்ப மட்டுமே விளம்பரம் வெளியிட்டு வரைகலை விளம்பரத்திற்கு ஆகும் செலவினத்தையும் குறைக்க நடவடிக்கை எடுக்கமாறு தொடர்புடைய அலுவலர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

7. சிக்கன நடவடிக்கையை கடைப்பிடிப்பதற்காக அரசாணை (நிலை) எண். 290, செய்தி சுற்றுலாத் துறை, நாள் 12–12–97ல் பத்தி 4ல் (அ) முதல் (உ) வரை குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளைத் தொடர்ந்து கடைப்பிடிக்குமாறு அனைத்து அலுவலர்களும் அறிவுறுத்தப்படுகின்றனர்.

8. இவ்வாணை நிதித்துறையின் அலுவலர் சார்பற்ற எண். 39684/செ.ம.சு./99–1, நாள். 27.5.99 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எஸ். ராஜரெத்தினம்,**
அரசு செயலாளர்

## 6. பேரூராட்சிகளின் பணிகள்

| | விளம்பரங்கள் வெளியிடும்நாளிதழ்களின் எண்ணிக்கைமற்றும் பதிப்பு | பணிகளின் மதிப்பு | வாங்கும் பொருட்கள் / கருவிகளின் மதிப்பு |
|---|---|---|---|
| 1. | மாவட்ட அளவிலான விளம்பரம்இரண்டு தமிழ் நாளிதழ்கள் (மாவட்ட அளவில் மட்டும்) | ரூ.10 இலட்சத்திற்கு மேல் ரூ. 25 இலட்சத்திற்குள் | ரூ.5 இலட்சத்திற்கு மேல் ரூ. 10 இலட்சத்திற்குள் |
| 2 | .மாநில அளவிலான விளம்பரஒரு ஆங்கில நாளிதழ் (மாநில பதிப்பு) ஒரு தமிழ் நாளிதழ் (அனைத்துப் பதிப்புகள்) (தமிழ்நாட்டில்) | ரூ.25 இலட்சத்திற்கு மேல் ரூ. 1 கோடிக்குள் | ரூ.10 இலட்சத்திற்கு மேல் ரூ. 25 இலட்சத்திற்குள் |
| 3. | ஒரு ஆங்கில நாளிதழ் (தென்னக பதிப்பு) ஒரு தமிழ் நாளிதழ் (அனைத்துப் பதிப்புகள்) தமிழ்நாட்டில் | ரூ.1 கோடிக்கு மேல் ரூ. 5 கோடிக்குள் | ரூ.25 இலட்சத்திற்கு மேல் ரூ. 1 கோடிக்குள் |
| 4 | ஒரு ஆங்கில நாளிதழ் (அனைத்துப் பதிப்பு) ஒரு தமிழ் நாளிதழ் (அனைத்துப் பதிப்புகள்) (தமிழ்நாட்டில்) | ரூ.5 கோடிக்கு மேல் | ரூ.1 கோடிக்கு மேல் |